## தேசிய பயிலுனர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை - 2014

தேசிய பயிலுனர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, கூட்டிணைக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் 56(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய பயிலுனர், கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 12,399,864 தொகையான மூலதன வடிவிலான செலவினம் வருமானச் செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்காகச் செலுத்தப்பட்ட வாடகையான ரூபா 338,513 தொகை மீளாய்வாண்டின் செலினமாகக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 72,837 தொகையான அட்டுறு செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபையின் பிரதான அலுவலகத்திற்கும் கிளை அலுவலகத்திற்குமிடையே உள்ளகக் கொடுக்கல் வாங்கல்களின் அடிப்படையில் ஏற்பட்ட கடன்பட்டோரும் கடன்கொடுத்தோரும் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு கணக்குகளில் காண்பிப்பதற்குப் பதிலாக தனித்தனியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.2 இணக்கமின்மைகள்**

நிதி நிலைமைக் கூற்றில் காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளில் உள்ளடங்கிய 04 வங்கிக் கணக்குகளுக்குரிய காசு மீதி மற்றும் உரிய மாவட்ட அலுவலகங்களில் காசேட்டு மீதிகள் என்பற்றுக்கிடையே ரூபா 95,295 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை**

நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற பின்வரும் விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | விபரம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | கண்காட்சி, மாநாடு மற்றும் விளம்பரச் செலவினம் | 402,275 | கொள்வனவுக் கட்டளை, பொருள் விநியோகித்தல் அறிவித்தல், பொருள் களஞ்சியத்திற்குக் கிடைத்த பற்றுச்சீட்டு |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தனியார் நிறுவனமொன்றினால் ஒழுங்கமைக்கப்பட்ட மாத்தறை மற்றும் குருணாகல் திறன் விருது நிகழ்ச்சித் திட்டத்திற்காக வழங்கப்பட்ட பயிற்சி உபகரணங்கள், மூலப்பொருள் இருப்பு, ரீ சேர்ட், கொடி, அழைப்புப்பத்திரம், போஸ்டர் மற்றும் பெனர்கள் | 16,799,674 | களஞ்சியத்திற்கு பொருட்கள் கிடைத்தமைக்கும் விநியோகித்தமைக்குமான தகவல்கள். |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 25 கடன்பட்டோர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 05 வருடங்களை விஞ்சிய ரூபா 1,469,022 தொகையும், ரூபா 1,603,608 தொகை 03 இற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாகவும், ரூபா 2,996,665 தொகை 01 முதல் 03 ஆண்டுகள் வரையான காலமாகவும் நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) சேவையை விட்டுச் சென்ற ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 209,185 தொகையான கடன் மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 1995 முதல் 2013 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியின் போது அதிகாரசபையால் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 265,154 தொகையான 21 முற்பண மீதிகள் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 03 ஆண்டுகளுக்கு மேல் காலம் கடந்திருந்த ரூபா 323,970 தொகையான கடன்கொடுத்தோர் மீதிகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| (i) 11 ஆம் பிரிவு | மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 78,685,317 தொகையான முதலீடு தொடர்பாக நிதி அமைச்சரின் இணக்கப்பாடு பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 13.8 ஆம் பிரிவு | நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் படி கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட படிமுறைகள் அறிக்கைத் திகதி முதல் 3 மாதங்களுக்குள் கட்டுப்பாட்டுச் சபையினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 மற்றும் |

2013 ஆம் ஆண்டுகளின் அறிக்கை தொடர்பாக அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

| | | |
|---|---|---|
| (i) | II ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு | ஒழுங்காற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சேவையிலிருந்து விலக்கப்பட்ட ஊழியரொருவர் அரசாங்க சேவையில் நியமனமொன்றைப் பெறுவதற்கு தகுதியற்றவராக இருந்த போதிலும் நிதி மோசடி தொடர்பாக தண்டனை பெற்று வேலை நீக்கத்திற்கு உள்ளாகிய உத்தியோகத்தருக்கு பணிப்பாளர் (நிதி) பதவியில் சேர்க்கப்பட்டிருந்தார். |
| (ii) | XV ஆம் அத்தியாயத்தின் 3.1 ஆம் பிரிவு | சேவையில் நிரந்தரமாக்குவதற்குப் பெற்றுக்கொள்ள வேண்டிய தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அன்றி தகுதிகாண் காலத்தில் இருக்கின்ற உத்தியோகத்தரொருவர் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட முடியாத போதிலும் அதற்கு முரணாக தகுதிகாண் காலத்தில் இருந்த பணிப்பாளருக்கு (நிதி) இரண்டு சந்தர்ப்பங்களின் போது வெளிநாடு செல்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 921,102 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

| | | |
|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104 | மீளாய்வாண்டில் ஏற்பட்ட 16 வாகன விபத்துக்களுக்கும் முன்னைய ஆண்டுகளில் ஏற்பட்ட வாகன விபத்துக்களுக்கும் உரியதாக ஏற்பட்ட நட்ட இழப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 395(இ) | 04 வங்கிக் கணக்குகள் தொடர்பாக மீளாய்வாண்டிற்கான வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்டிருந்தும் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 590,306 கூட்டுத்தொகையான காசோலைகள் மற்றும் 27 காசுக் கட்டளைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1646 | மீளாய்வாண்டில் 23 வாகனங்களுக்கான ஓட்ட அட்டவணையும் மாதாந்தப் பொழிப்பும் 17 வாகனங்களுக்குரிய 58 மாத ஓட்ட அட்டவணையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 6.5.1 ஆம் பிரிவு | கணக்குகளுடன் ஆண்டறிக்கையின் வரைவு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 8.3.8 ஆம் பிரிவு | அமைச்சரவையின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் மாத்திரம் நன்கொடைகள் மற்றும் பரிசுகள் வழங்க முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரமொன்று இன்றி ரூபா 2,700,000 தொகை நன்கொடைக்காக செலவிடப்பட்டிருந்தது. |
| (உ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | 06 மாதங்களுக்கு ஒரு தடவை வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை செய்யப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபைக்குரிய 55 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 2006 இன் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1 (இ) பிரிவு | தகைமையுள்ள மற்றும் அக்கறை காண்பிக்கின்ற தரப்பினர்களுக்கு கொள்வனவுகளில் பங்குபற்றுவதற்காக நியாயமான, சமமான மற்றும் ஆகக் கூடிய சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டியிருந்த போதிலும் ரூபா 33 மில்லியன் தொகையான மாத்தறை திறன் விருது நிகழ்ச்சித்திட்ட ஒழுங்கமைப்பிற்காகவும் ரூபா 14 மில்லியன் பெறுமதியான விழாக்கள் மற்றும் 09 செயலமர்வுச் சந்தர்ப்பங்களுக்காகவும் 02 தனியார் நிறுவனங்களுக்கு கொள்வனவு நடைமுறைகளைப் பின்பற்றாமல் வழங்கப்பட்டிருந்தது. |
| (எ) | 2010 செப்தெம்பர் 01 ஆந் திகதிய 446 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் அங்கீகரிக்கப்பட்ட தொலைபேசிச் செலவினங்களின் எல்லையை விஞ்சி செலவிடப்பட்ட முறையே ரூபா 258,091 மற்றும் ரூபா 127,927 தொகைகள் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படாதிருந்ததுடன் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளில் வெளிப்படுத்தப்படாத பதவிகளில் உள்ள 410 உத்தியோகத்தர்களுக்கு 2012 செப்தெம்பர் முதல் 2014 திசெம்பர் 31 வரை தொலைபேசிச் செலவினமாக ரூபா 7,705,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 19,566,476 தொகையான பற்றாக்குறையாக இருந்ததுடன் இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 68,317,478 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 48,751,002 ஆன அதிகரிப்புக் காணப்பட்டது. இந்த அதிகரிப்பிற்காக முன்னைய ஆண்டினை விட அரசின் மானியங்கள் மற்றும் ஏனைய வருமானங்கள் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தன.

### 3.2 அதிகாரசபைக்கு எதிராக அல்லது அதிகாரசபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

மூன்று உத்தியோகத்தர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியம் செலுத்துவது புறக்கணிக்கப்பட்டமையினாலும் உத்தியோகத்தரின் சேவையை முடிவுறுத்துவது தொடர்பாகவும் அதிகாரசபைக்கு எதிராக 04 வழக்குகளும் வெள்ளவத்தை பயிற்சி நிலையக் காணியின் உரித்து தொடர்பாக அதிகாரசபையினால் வழக்கொன்றும் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது பல்வேறு பயிற்சித் துறைகளின் கீழ் 81,150 பயிலுனர்களைச் சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், உள்ளபடியாக 31,464 பேர் மாத்திரமே சேர்க்கப்பட்டிருதனர். அதன்படி எதிர்பார்த்த இலக்கினைவிட உள்ளபடியான ஆட்சேர்ப்புகள் 61 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் சேர்க்கப்பட்ட பயிலுனர்களுக்கிடையே 4,026 பயிலுனர்கள் அல்லது 13 சதவீதமானோர் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர்.

(ஆ) மீளாய்வாண்டின் போது 20 தேசிய திறன் அங்கீகார அபிவிருத்தி மற்றும் செல்லுபடியாக்கல்கள் மேற்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் 14 தேசிய திறன் அங்கீகார அபிவிருத்திகளும் 04 தேசிய திறன் அங்கீகார செல்லுபடியாக்கல்களும் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 20 வினாப்பத்திரங்களை மேற்பார்வைகளை மேற்கொள்வதற்கு இலக்கிட்டிருந்த போதிலும் 02 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தது. இலக்கிடப்பட்ட திறன் அடிப்படையிலான மதிப்பீட்டு வளத்தை திருத்தி செல்லுபடியாக்குதல் 20 இல் எதுவும் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) திறன் சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் எதிர்பார்த்த இலக்கு மற்றும் உள்ளபடியான செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு இருந்தது.

(i) மீளாய்வாண்டின் போது யாழ்ப்பாண மாவட்டத்தின் பயிற்சி நிலையத்தை நவீனமயப்படுதுவதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,000,000 தொகைக்கு மேலதிகமாக ரூபா 1,493,637 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) தொழிற்பயிற்சி பயிலுனர்களின் எண்ணிக்கை 60,000 வரை அதிகரிப்பதற்கு ரூபா 9,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் அந்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தெரிவு செய்யப்பட்ட 04 துறைகள் தொடர்பாக ஆணைக்குழுவை நியமிப்பதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 773,739 தொகை செலவிட்டிருக்கும் போது அந்த பணிகள் அதிகாரசபையின் விடயப் பரப்பிற்குள் இணங்காதிருந்ததாகக் காண்பித்து இடையில் நிறுத்தப்பட்டிருந்தது.

(iv) 10 துறைகளுக்காக புதிய தேசிய திறன் நியமங்களை அபிவிருத்தி செய்தல் நோக்கமாக இருந்த போதிலும் ஆண்டின் போது 02 துறைகளில் மாத்திரமே தேசிய திறன் நியமங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது.

(v) முற்கற்றலின் பின் கண்டறியும் (RPL) நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் போது 5,000 சான்றிதழ் பத்திரங்களை விநியோகிப்பதற்கு ரூபா 25,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 58,114,789 தொகை செலவில் 1,666 சான்றிதழ் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஒருவருக்கு சான்றிதழ் பத்திரம் விநியோகிப்பதற்காக ரூபா 5,000 மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபை ஒரு சான்றிதழ் பத்திரத்தை வழங்குவதற்காக ரூபா 34,883 தொகையை செலவிட்டிருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் மாத்தறை மற்றும் குருணாகலில் நடாத்தப்பட்ட திறன் விருது நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2014 ஏப்ரல் 04 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின்படி திறன் விருது நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பீட்டாளருக்கு நாளொன்றுக்கு செலுத்த முடியுமான படி ரூபா 3,000 ஆக இருந்த போதிலும் மாத்தறை திறன் விருது நிகழ்ச்சித்திட்டத்தின் போது மின்சாரத் தொழில்நுட்பவியலாளர் மற்றும் மேசன் மதிப்பீட்டாளருக்கு நாளொன்றுக்கு ரூபா 7,500 படியும், அழகுக் கலை மற்றும் நீர்குழாய் தொழில்நுட்பவியல் மதிப்பீட்டாளருக்கு ரூபா 5,000 படியும், குருணாகல் நிகழ்ச்சித்திட்டத்தின் போது மதிப்பீட்டாளருக்கு ரூபா 5,000 படியும் செலுத்தப்பட்டமையினால் ரூபா 560,500 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(ii) முற்கற்றலின் பின் கண்டறியும் (RPL) முறைமையின் கீழ் 500 வடிவமைப்பாளர்களை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டாளருக்கும் உத்தியோகத்தர்களுக்கும் ரூபா 5,000 படியொன்று செலுத்தப்பட்டிருக்கும் போது அதிகாரசபையினால் தங்குமிட வசதி மற்றும் உணவு வழங்கலுக்காக ரூபா 335,823 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(iii) சான்றிதழ் பத்திரம் வழங்குவதற்கு தகுதியானதா என மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் உறுதிப்படுத்திக் கொள்ளாமல் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கிய விண்ணப்பதாரிகளுக்கு ரூபா 275,000 தொகை செலவில் பரிசுகள் வழங்கப்பட்டிருந்தன.

(iv) தேவைகள் இனங்காணப்படாமலும், முன் அங்கீகாரம் பெறப்படாமலும் இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மதிப்பீட்டாளருக்கு அறிவிப்பதற்கு ஹோட்டலொன்றில் செயலமர்வொன்று நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒருவருக்காக உணவு மற்றும் மண்டபக் கட்டணமாக ரூபா 2,850 வீதம் 70 பேர்களுக்கு ரூபா 199,500 தொகை செலவிடப்பட்டிருந்தது. மேலும் இதற்கு மேலதிகமாக சமுகமளித்தவர்களுக்கு ரூபா 1,000 வீதம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அவர்களின் வருகை மற்றும் பணம் பெறப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் காணப்படவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிற்காக 3,000 வாழ்த்து மடல்கள் அச்சிடுவதற்காக ரூபா 129,780 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் வாழ்த்து மடல்களை பகிர்ந்தளித்தல் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தனியார் தொலைக்காட்சி அலைவரிசையில் 05 நாட்கள் விளம்பரம் செய்வதற்காக 30 தொலைக்காட்சி அறிவித்தல்களைத் தயாரிப்பதற்காக ரூபா 780,000 தொகை

செலவிடப்பட்டிருந்த போதிலும், அது விளம்பரப்படுத்தப்பட்டமைக்கான தகவல்கள் மற்றும் கூறுவிலை கோரல் தொடர்பான விபரங்கள் காணப்படவில்லை.

(ஈ) 05 உத்தியோகத்தர்களுக்கு செயலாற்றல் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்ட நியமங்கள் அல்லது படிகளைப் பெறுவதற்காக அரையாண்டு சேவையில் ஈடுபட்டமைக்கான தகவல்கள் இன்றி திறன்சார்ந்த அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் செயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு படியாக ரூபா 709,491 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) கிளிநொச்சி பயிற்சி நிலையத்தின் அடிக்கல் நாட்டும் விழாவிற்காக சேவை வழங்கிய நிறுவனம் கூறுவிலை சமர்ப்பிப்பதற்கு முன்னர் ரூபா மில்லியன் முற்பணமொன்று அதிகாரசபையின் மூலம் செலுத்தப்பட்டிருந்ததுடன் நிர்வாக சபையின் அங்கீகாரமின்றி விழாச் செலவினமாக சேவை வழங்கிய நிறுவனத்திற்கு ரூபா 4,098,950 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) டிரான்ஸ்போமர் இயந்திரமொன்றைப் பொருத்துவதற்காக 2014 மே 29 ஆந் திகதி தனியார் கம்பனியொன்றிற்கு ரூபா 1,005,161 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2015 யூன் 06 ஆந் திகதி வரையிலும் அது பொருத்தப்பட்டிருக்கவில்லை.

(எ) ரூபா 1,657,580 பெறுமதியான நேரடி வைப்புக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) அதிகாரசபையினால் மீளளிப்பு அடிப்படையில் உலக இளைஞர் மாநாட்டிற்காக செலவிடப்பட்ட ரூபா 02 மில்லியன் தொகையை அமைச்சிலிருந்து மீளளிப்புச் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பொது நலவாய தலைமைத்துவ செயலமர்விற்கு இணையாக அதிகாரசபையின் பிரதான கட்டிடத்தை ஒளியூட்டுவதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 368,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் பல்வேறு நிறுவனங்களில் விழா வலயத்திற்காக ரூபா 175,000 செலவிடப்பட்டிருந்ததுடன் அடிக்கல் நாட்டும் விழாவிற்கு பெனர் ஒன்று வைப்பதற்காக ரூபா 111,600 தொகையும் 100 ஊடகவியலாளர்களுக்கு ரீ சேட்டும் வழங்குவதற்கு ரூபா 67,500 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக களஞ்சியத்தில் காணப்பட்ட பெறுமதி ரூபா 563,360 தொகையான பொருட்கள் கணக்காய்வுத் திகதியான 2015 யூலை 15 ஆந் திகதி வரையிலும் பிரதேச அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குருணாகல் திறன் விருது நிகழ்ச்சித்திட்டத்திற்காக 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,464,848 தொகையான பயன்படுத்தக்கூடிய பயிற்சி உபகரணங்கள் மாத்தறையில் நடைபெற்ற அடுத்த திறன் விருது நிகழ்ச்சித்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாது ஒறுகொடவத்த களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) அதிகாரசபையின் 13 வாகனங்கள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஓட்டத்தில் ஈடுபடாமல் விளைவற்றுக் காணப்பட்டது.

**4.5 ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரசபையின் வளங்கள்**

அதிகாரசபையின் ஆறு ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கும் இரண்டு பேர் ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்கும் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் விடுவிக்கப்பட்ட காலம் 4 மாதங்கள் முதல் 10 வருடங்கள் வரையிலான வீச்சில் இருந்தது. இதில் இரண்டு ஊழியர்களுக்காக அதிகாரசபையினால் செலுத்தப்பட்ட ரூபா 279,829 தொகை உரிய நிறுவனத்திலிருந்து மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 1358 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 887 ஆகும். அதன்படி வெற்றிடமான பதவிகளின் எண்ணிக்கை 471 ஆக இருந்ததுடன் அந்த பதவிகளுக்காக உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைய, தற்காலிக மற்றும் ஒப்பந்த அடிப்படையில் அமைச்சின் அல்லது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 24 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 4,248,402 தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடைமுறைகளின்படி பரீட்சகர் (Inspector) பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெறப்பட்ட பொறியியல் / விவசாய விஞ்ஞானம் / கணிதம் போன்ற பிரிவுகளிலிருந்தோ அல்லது பட்டத்துடன் உரிய துறையில் 05 வருட பயிற்சியொன்று இருக்கவேண்டிய போதிலும், அந்த தகைமைகளைப் பூர்த்தி செய்யாத இருவர் பரீட்சகர்கள் உத்தியோகத்தர்களாக சேர்க்கப்பட்டிருந்ததுடன் ஒருவர் வியாபார முகாமைத்துவத்தில் (விசேட கணக்கீடு) பட்டதாரியாவார்.

(ஈ) அதிகாரசபையின் பணிப்பாளர் (பயிற்சி) பதவிக்காக கூட்டுத்தாபனம், சபை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட வியாபார முயற்சியாளராக ஆகக் குறைந்தது 15 வருடங்கள் முகாமைத்துவ மட்டத்தின் அனுபவம் தேவையாக இருந்த போதிலும் 2014 ஒக்தோபர் மாதம் 01 ஆந் திகதி அதிகாரசபையின் பணிப்பாளர் (பயிற்சி) பதவிக்கு அந்த அனுபவம் இல்லாத உத்தியோகத்தரொருவர் சேர்க்கப்பட்டிருந்தார்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2002 மே 24 ஆந் திகதிய பீஎப்/பீஈ/21 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின்படி நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 யூன் 01 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**5.2 கொள்வனவுத் திட்டம்**

அதிகாரசபையினால் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே ரூபா 60,095,856 தொகையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு வினைத்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ செயற்திறனின்மையாக நடைமுறை வேலைகளின் கீழ் முன்னைய ஆண்டில் காண்பிக்கப்பட்ட 07 ஒப்பந்தங்கள் தொடர்பாக தாமதக் கட்டணம் அறவிடப்படாமை, ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமை, ஒப்பந்தம் வழங்கல் கடிதம் வழங்கப்படாமை, குறிப்பிட்ட திகதியில் உள்ளவாறு வேலை பூர்த்தி செய்யப்படாமை போன்ற குறைபாடுகளை சரிசெய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரதான மண்டபத்தை நிர்மாணிக்கும் ரூபா 1,999,500 தொகையான ஒப்பந்தத்திற்காக ஒப்பந்தக் கையளித்தல் கடிதம் அல்லது முறையான உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. அதற்காக 2013 பெப்ரவரி 28 ஆந் திகதி ரூபா 200,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் எந்தக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரதான அலுவலகத்தின் சுற்றாடலை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 1,327,000 தொகையான ஒப்பந்தம் தொடர்பாக உடன்படிக்கைக்கு உட்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டின் போது ஒப்பந்தக்காரருக்கு ரூபா 700,000 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2015 யூலை மாதம் வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ஏனைய எந்தக் கொடுப்பனவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஆ) நிலையான சொத்துக்கள் முகாமைத்துவம்
(இ) வாகனப் பயன்பாடு
(ஈ) பயிலுனரும் பயிற்சி நடவடிக்கைகளும்
(உ) பதவியணி முகாமைத்துவம்